ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

எனது இல : PS/SP/SB/3/3/2019 சுற்றறிக்கை இல: PS/SP/SB/circular/3/2019
2019 டிசம்பர் மாதம் 02 ஆந் திகதி

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்
சகல மாவட்டச் செயலாளர்களுக்கும்

**நாடு முழுவதிலும் பல மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமைகள் தொடர்பாக நிவாரணங்களை வழங்குதல்**

சீரற்ற காலநிலை காரணமாக தற்போது நாடு முழுவதிலும் பல்வேறு மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு, மண்சரிவு உட்பட ஏனைய அனர்த்த நிலைமைகளின் போது மக்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களது நலன்புரியை உறுதிப்படுத்துதல் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய சகல நடவடிக்கைகளையும் தாமதமின்றி முன்னெடுக்குமாறு அதிமேதகு சனாதிபதி அவர்களின் ஆலோசனைக்கமைய இத்தால் அறிவிக்கின்றேன்.

நிலவும் கடும் மழை காரணமாக ஏற்படும் மண்சரிவு, மண்மேடுகள் சரிதல், கற்பாறைகள் உருளுதல் போன்ற ஆபத்தான நிலைமைகளை எதிர்கொள்ளக் கூடிய வகையில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி அனர்த்த பாதிப்புக்களை குறைப்பதற்கு துரித பதில் நடவடிக்கைகளை எடுக்கக் கூடிய வகையில் அதற்கான பின்னணியை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும். மக்களின் நலன்புரிக்காக தேவையான துரித நடவடிக்கைகளை எடுக்குமாறும் அதிமேதகு சனாதிபதி அவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளார்.

மேலும் அதிகரிக்கக் கூடிய சீரற்ற காலநிலைமைகள் மற்றும் அதனால் ஏற்படும் பாதிப்புக்களை குறைத்துக் கொள்ளல் தொடர்பாக மக்களுக்கு மிகவும் பரந்தளவில் அறிவூட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறும் மேலும் அறிவிக்கின்றேன். மாண்புமிகு பிரதமரின் தலைமையில் இந்த விடயத்தை ஒருங்கிணைப்பதற்கும் மீளாய்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இச்சுற்றிக்கையில் உள்ள அறிவுறுத்தல்களை உங்களது நிறுவனத்தின் கீழ் இருக்கும் சகல நிறுவனங்களுக்கும் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்வதுடன், இவ்விடயம் தொடர்பாக ஏற்கனவே விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிவித்தலின் பிரதியொன்றையும் இத்துடன் இணைத்துள்ளேன்.

**ஒப்பம் : பி.பீ.ஜயசுந்தர**
சனாதிபதியின் செயலாளர்

**பிரதிகள்:**

1 பிரதமரின் செயலாளர்
2 செயலாளர் பாதுகாப்பு அமைச்சு
3 செயலாளர் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கைகள் அபிவிருத்தி அமைச்சு
4 பணிப்பாளர் நாயகம், அனர்த்த முகாமைத்துவ நிலையம்

} உரிய நடவடிக்கைகளை முன்னுரிமையின் அடிப்படையில் மேற்கொள்வதற்காக

ගාලු මුවදොර, කොළඹ 01
காலி முகத்திடல், கொழும்பு 01
Galle Face, Colombo 01
දුරකථන / தொலைபேசி / Telephones ++ 94 (0) 11 2354418, ++ 94 (0) 11 2473873
ෆැක්ස් / தொலைநகல் / Fax ++ 94 11 2446657
ඊ-තැපෑල / மின்-அஞ்சல் / e-mail prsec@presidentsoffice.lk